10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 232 வியாழக்கிழமை ஜனவரி 11 2018 ethirolimedia@gmail.com 02... 21 300 48 48



## கிளிநொச்சியில் கைவிடப்பட்ட சிசு

கிளிநொச்சி, ஜன.11

கிளிநொச்சியில் கைவிடப்பட்ட நிலையில் சிசு ஒன்று பொலிஸாரால் நேற்றுக் 06▶

# அமளி

* சட்டைகள் கிழிந்தன
* எம்.பி மயக்கம்
* ஒருவருக்கு காயம்

கொழும்பு, ஜன.11

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக விவாதிக்க பிரதமரின் கோரிக்கையின் பேரில் நேற்றுக் கூட்டப்பட்ட நாடாளுமன்றம் அமளிதுமளி யானதால்; சபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன.

நாடாளுமன்றத்தின் அவசரக் கூட்டம் நேற்றுக் காலை ஆரம்பமான போது, பிணைமுறி அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருப்பதாகச் சபாநாயகர் தெரிவித்தார்.

இதையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றினார். அப்போது கூட்டு எதிரணியினர் கூச்சல் குழப்பம் விளைவித்தனர். சபைக்கு 06▶





அச்சத்தாலேயே சுமந்திரன்

## ஊடகங்களை மிரட்டுகிறார்

யாழ்ப்பாணம், ஜன.11

தாங்கள் கூறும் கருத்துக்களை மட்டுமே ஊடகங்கள் காவிச் செல்ல வேண்டும் என்று விரும்புபவர்கள் ஏனையோரின் கருத்துக்கள் ஊடகங்களில் வருகையில், பதற்றப்பட்டு, அஞ்சி ஊடகங்களை மிரட் 06▶

## அநீதிக்குப் பொறுப்புக்கூற அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்

### அமைச்சர் அனந்தி கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.11

“தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறுவதிலிருந்து இலங்கை அரசாங்கம் தப்பிக்கவே முயன்று வருகின்றது. எனவே தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு இலங்கை அரசு பொறுப்புக் 06▶



## பூசை செய்யச் சென்றவர் கோயிலில் உயிர் துறப்பு

கொடிகாமம், ஜன.11

கோயிலில் பூசை செய்ய ஆயத்தமான பூசாரி ஒருவர்,மாரடைப்பால் கோயிலிலேயே வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம், வெள்ளாம்போக்கட்டி பகுதியில் உள்ள விறுமர் ஆலயத்தில் நேற்று மதியம் 2 மணியளவில் இடம்பெற்றுள்ளது. குறித்த 06▶

## அஞ்சலிக்க மறந்த அரசியல்வாதிகள்

யாழ்ப்பாணம், ஜன.11

தமிழின வரலாற்றில் ஆறாதவடுவை ஏற்படுத்திய தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவேந்தலை தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும் புறக்கணித்தமை மக்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும், ஒரு மாகாண அமைச்சரும் , ஒரு சில மாகாணசபை உறுப்பினர்களும் 06▶

### தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை

# யாழில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜன.11

1974 ஆம் ஆண்டு யாழில் நடைபெற்ற உலகத் தமிழாராச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது நினைவேந்தல் நிகழ்வு யாழ் .முற்றவெளியில் அமைந்துள்ள நினைவுத்தூபியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், ஆ.பரஞ்சோதி மற்றும் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடவுள்ள சில வேட்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக மலரஞ்சலியும்,உரைகளும் இடம் பெற்றன. (அ)





உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

# வெடி போட்டு மாணவர்களை கலைத்த அடாவடிப் பேர்வழி






முல்லைத்தீவு, ஜன.11

பாடசாலைக் காணிக்குள் மாணவர்களை நுழையவிடாமல் வெடி கொளுத்தி கலைத்த தனிநபருக்கு எதிராக மாணவர்களும், ஆசிரியர்களும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு , பூதன்வயல் கிராமத்தில் 1986 ம் ஆண்டு முதல் இயங்கிவந்த பாடசாலையின் காணி ஒன்றினை மீள்குடியேற்றத்தின் பின்னர் தனிநபர் ஒருவர் சுவீகரித்துள்ளார். இது தொடர்பாக மக்களால் பல்வேறு தரப்பினரிடமும் முறையிடப்பட்டும் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. இந்த நிலையில் நீதிமன்றில் தொடுத்த வழக்கில், குறித்த காணி பாடசாலைக்கே சொந்தமானது என்று டிசம்பர் மாதம் 14 ம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டது.

இருப்பினும் குறித்த காணியைச் சுவீகரித்த நபர் நேற்றுமுன்தினம் வெடிகளைக் கொளுத்தியபடி காணிக்குள் நுழைந்துள்ளார். அத்துடன் குறித்த காணியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யச் சென்ற மாணவர்களையும், ஆசிரியர்களையும் அச்சுறுத்தி உள்ளே செல்லவிடாமல் தடுத்துள்ளார். இதனையடுத்து இன்று மாணவர்கள் ஆசிரியர்களை பாடசாலைக்குள் செல்லவிடாது தடுத்துள்ளார். இதனையடுத்து அந்தப்பகுதியில் முறுகல் நிலை ஏற்பட்டது.

தொடர்ந்து அங்கு கூடிய பொதுமக்களும், பாடசாலைச் சமூகத்தினரும் அடாவடி நபருக்கு எதிராக வாசலை மூடி வீதியை மறித்து போராட்டத்தில் குதித்தனர். பாடசாலை அதிபர் முள்ளியவளைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்கு முள்ளியவளைப் பொலிஸார், பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடி குறித்த் இடத்தில் அடாத்தாகக் குடியேறியிருந்த நபரை வெளியேற்றி பாடசாலையை இயங்க வைக்க நடவடிக்கை எடுத்தனர். இதனையடுத்துப் போராட்டம் முடிவுக்கு வந்தது. (அ)

# புலிகளின் பாணியில் 'ஓட்டோப் படகு'





கொழும்பு, ஜன. 11

விடுதலைப் புலிகளின் தொழில்நுட்ப வழிமுறைகளைப் பின்பற்றி, தென்னிலங்கை இளைஞர்கள் சிலர் ஓட்டோ மூலம் படகு ஒன்றைத் தயாரித்துள்ளனர். ஓட்டோ ஒன்றுக்கு வெற்றுபரல்கள் மூலம் மிதவைகள் பக்கவாட்டாகப் பொருத்தப்பட்டு, அதன் பின்பக்கத்தில் படகு இயந்திரத்தைப் பொருத்தியே இந்த ஓட்டோப் படகு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. இந்த ஓட்டோப் படகு வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.


இதனைக் கண்டுபிடித்தவர்கள் தொடர்பில் இதுவரை உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை. எனினும் இது தொடர்பான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரவலாகி வருகின்றன. (அ)

# சடலங்களை எரிக்க முடியாதா?

வடமராட்சி,ஜன.11

கரவெட்டிப் பிரதேச செயலர் எல்லையில் அமைந்துள்ள, தென்மராட்சி வரணி மக்களால் பய்ன்படுத்தப்பட்டு வரும் தில்லையம்பலம் இந்து மயானத்தில் தகனக் கொட்டகை அமைக்கப்பட்டுள்ள போதிலும், கொட்டகைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட மயான எல்லைக்கு அப்பாலேயே சடலங்களை எரிக்கவேண்டியுள்ளதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இதனை மாற்றியமைத்து, சகலரும் சடலங்களை கொட்டகை அமைக்கப்பட்ட மயானத்தில் தகனம் செய்ய, உள்ளூராட்சி ஆணையாளர், பிரதேச செயலர், பிரதேச சபை செயலர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# 'பூமாதேவி என்ற பேருயிரி' ஐங்கரநேசனின் பேருரை





யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இன்ரறக்ற் கழகத்தின் ஏற்பாட்டில், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன், ' பூமாதேவி என்ற பேருயிரி' என்ற தலைப்பில் நேற்றுப் புதன்கிழமை சிறப்புரை ஆற்றினார். (அ)

# சங்கரியின் படத்தைப் போட துணிவில்லையா?

## சத்தியலிங்கம் கேள்வி



வவுனியா, ஜன.11

"தங்களுடைய கட்சி பொதுச் செயலாளரின் படத்தைக் கூட போடுவதற்கு திராணியற்றவர்கள் தான், மாற்றுத் தலைமை பற்றிப் பேசுகிறார்கள்" என வடமாகாண சபை உறுப்பினரும், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சருமான ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபையில் பண்டாரிக்குளம் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளரின் அலுவலகத்தை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

"உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகின்ற ஆனந்தசங்கரி ஐயாவுடைய கட்சி வவுனியாவில் பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு இருந்தது. அந்த துண்டுப் பிரசுரங்களில் அவர்கள் இரண்டு கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றார்கள். புதிய தலைமை அல்லது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது இடைக்கால அறிக்கையை நிராகரிப்பதற்கு வாக்களிப்போம்.

ஆனால் இந்தக் கட்சிக்காரர்கள் ஏனோ தெரியவில்லை தங்களுடைய கட்சி பொதுச் செயலாளரான ஆனந்த சங்கரி ஐயாவின் படத்தைக் கூட போடுவதற்கு திராணியற்றவர்கள். அவரின் படத்தைப் போட்டால் தாங்கள் தோற்று போய்விடுவோம் என யோசிக்கிறார்கள். நீண்டகாலமாக அந்தக் கட்சியை வழிநடத்திய ஒருவருடைய படத்தைக் கூட போடுவதற்கு திராணியற்றவர்கள் உள்ளூர்த் தலைவர்களான மாகாண சபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் படங்களைப் போட்டு துண்டு பிரசுரங்களை வெளியிட்டுள்ளார்கள்.

தங்களுடைய கட்சியின் தலைமையிலேயே நம்பிக்கையில்லாதவர்கள் அல்லது தங்களது கட்சித் தலைமையின் படத்தை போட்டால் தோற்று விடுவோம் என்று பயப்பிடுபவர்களே தலைமை மாற்றத்தைப் பற்றி பேசுகிறார்கள்.

நாங்கள் எங்களுடைய கட்சியின் பெரும் தலைவர்களான தந்தை செல்வா, கூட்டமைப்பின் தலைவராகவுள்ள சம்பந்தன் ஐயா, தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோரின் படங்களை போட்டுள்ளோம். ஏன் உங்களுக்கு அந்தத் துணிவு இல்லை?" என்று அவர் இதன் போது கேள்வியெழுப்பியுள்ளார். (அ)

எதிரொலி
Ethiroli
வியாழன், 11 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

# நம்மை நாமே அழிப்போம்

போர் நடந்த போதும் சரி, அதன் பின்னரும் சரி படையினர் தாம் நிலைகொண்ட பகுதிகளில் முதலாவதாகச் செய்த வேலை புலிகளின் நினைவிடங்களை இல்லாமல் செய்ததுதான். மாவீரர் துயிலுமில்லங்கள், உருவச்சிலைகள், வீதிப் பெயர்ப்பலகைகள், நினைவுக்கற்கள், தூபிகள் என்பவற்றையெல்லாம் ஒரு துகள் கூட எஞ்சாமல் அழித்துவிட்டுத்தான் மறுவேலை பார்த்தார்கள். ஏனெனில் அந்த நினைவுச் சின்னங்கள், காலத்தைக் கடந்தும் மௌனமாக பல செய்திகளை அடுத்த தலைமுறைக்கு சொல்லிவிடக் கூடும் என்று பயந்தார்கள். வெறும் வாய்வழிக் கதைகளை விடவும், நிகழ்ந்து போனவைகளின் சாட்சியாக நிற்கின்ற நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்துகின்ற தாக்குவன்மை மிக வலிமையானது.

புலிகளின் நினைவுகளைச் சுமந்து நிற்கும் இடங்களை அழிப்பதில் காட்டிய அதே தீவிரத்தை தங்கள் சார்ந்த நினைவிடங்களை உருவாக்குவதில் அரச படைகள் காட்டின. வடக்கின் பல பகுதிகளிலும் – முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு, கொக்காவில், கிளிநொச்சி, ஆனையிறவு என்று– வழிநெடுகளிலும் படையினரின் வெற்றித்திமிரை மார்தட்டுகின்ற, தமிழர்களின் அழிவைக் கொண்டாடுகின்ற நினைவுச் சின்னங்களைப் படையினர் நிர்மாணித்துள்ளனர். நினைவிடத்தை அமைத்ததோடு தங்கள் வேலை முடிந்ததென்று அந்த இடங்களைப் புதர் மண்டிப்போக அவர்கள் விடவில்லை. நாளும் பொழுதும் அவற்றைச் சுத்தமாக்கி, நாலைந்து படையினரைப் பக்கத்தில் நிறுத்தி, கண்ணை இமை காப்பது போலப் பராமரிக்கிறார்கள். தென்னிலங்கையில் இருந்து வரும் சிங்களப் பயணிகளும், விகாரைகளை வணங்குவது போல இந்த நினைவுச்சின்னங்களுக்கு இறங்கிச் சென்று மரியாதை செலுத்துவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த மண்ணின் பூர்வீகக்குடிகள் என்று அடிக்கடி சொல்லி, உரிமை கொண்டாடும் நாம், போரும் படையினரும் அழித்தது போக எஞ்சியிருக்கும் ஒரு சில நினைவுச் சின்னங்களைக் கூட கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். முற்றவெளியில் உள்ள தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலையானோர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை வருடத்தில் ஒருநாள் மட்டும் சுத்தப்படுத்தி, நினைவேந்திவிட்டு, பின்னர் அந்தத் தூபி இருப்பதையே மறந்துவிடுவோம். இந்த முறை அந்த வருடத்தில் ஒருநாள் செய்யும் சுத்தப்படுத்தலையும் தமிழினம் மறந்து போனோம்.

காலையில் அஞ்சலி செய்ய வந்தவர்களுக்கு அங்கு வந்தபின்னர் தான், குறித்த நினைவுத்தூபி எப்படிப்பட்ட அலங்கோல நிலையில் இருக்கிறது என்பது தெரியவந்தது. இத்தனைக்கும் அவர்கள் தான் இந்த மக்களின் பிரதிநிதிகள். குறித்த தூபி இருந்த பகுதியால் அவர்கள் நூற்றுக் கணக்கானதரம் பயணித்திருப்பார்கள். அண்மையில் கூட பிக்குவின் சடலம் இதே முற்றவெளியில் தகனம் செய்யப்பட்ட போதும், தமிழாராய்ச்சி நினைவுத்தூபி உள்ள இடத்தில் பிக்குவின் உடலை எரிப்பதா? என்று அறிக்கை கூட விட்டிருந்தார்கள். ஆனால் அப்படிச் செய்யும் போதெல்லாம் புதர் மண்டிக்கிடக்கும் தூபியை கொஞ்சம் சீராக்கி வைப்போம் என்று எண்ணத் தோன்றவில்லை. நேற்றையதினம் அஞ்சலி நிகழ்வு நடக்கும் என்று தெரிந்திருந்த, குறித்த பகுதியின் ஆளுகையைக் கொண்டிருக்கும் யாழ்.மாநகர சபையினர் கூட, அதைச் சுத்தம் செய்ய மறந்து போனார்கள். கடைசி நேர, அவசரத்தனமான 'புல்லுப் பிடுங்கலின்' பின்னரே நினைவேந்தல் தாமதமாக நடந்தது. அதைவிட, நேற்றைய நினைவேந்தலில் வெறும் 16 பேர் மட்டுமே கலந்து கொண்டனர். ஏனைய அரசியல்வாதிகளுக்கு இந்த நினைவேந்தலை விடவும் தேர்தல் வேலைகளே பிரதானமாகத் தெரிந்ததால், அவர்கள் தலை காட்டவில்லை. மக்களும் இது ஏதோ வேண்டாத நிகழ்வு போல எட்டியும் பார்க்கவில்லை.

இப்படி எங்கள் கடந்தகால வலிகளை, நினைவுகளை வாழ்வியலை சொல்கின்ற எல்லாவற்றையும் நாங்களே மறக்கத் தொடங்கிவிட்டோம். வெசாக் கூடுகளைப் பார்க்க குவிகின்ற கூட்டத்தில் நூற்றில் ஒரு பங்கினர் கூட , தமிழினப் படுகொலையொன்று நிகழ்ந்த இடத்துக்கு வரவில்லை. கேளிக்கைகளுக்கும், களியாட்டங்களுக்கும் மட்டுமே கூடிவோராக மாறிவிட்டோம். இப்படி நாம் இருப்பதையே பேரினம் விரும்புகிறது. அப்போதுதான் அவர்கள் நினைத்தைச் செய்யமுடியும். வாள் கொண்டு போராடிய இனம், இனி இப்படியே வாளாது போகட்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# விசா வழங்கும் நடைமுறையில் புதிய மாற்றங்கள் விரைவில்

கொழும்பு,ஜன.11

தற்போது பயன்பாட்டிலுள்ள விசா வகைகள் மற்றும் அவற்றுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் காணி அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"இலங்கையில் அபிவிருத்தி செயன்முறைக்காக தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைவாக தற்போது நடைமுறையிலுள்ள விசா வெளியிடும் செயன்முறையினை முறைப்படுத்தல் மற்றும் புதுப்பிப்பதற்கு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தற்போது பயன்பாட்டிலுள்ள விசா வகைகளுக்கு மற்றும் அவற்றுக்காக அறவிடப்படுகின்ற கட்டணங்களில் திருத்தம் செய்வதற்கும், தற்போது இலங்கை ரூபாவில் அறவிடப்படுகின்ற கட்டணத்தினை அமெரிக்க டொலரில் அறவிடுவதற்கும் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில்,

♦ இலங்கை முதலீட்டு சபையின் கீழ் காணப்படுகின்ற துறைகளின் முதலீட்டாளர்கள், பணியாளர்களுக்கு உரிய குடியிருப்பு விசாக்களை சிபார்சு செய்யும் அதிகாரத்தினை முதலீட்டு சபை உரித்தாகும் அமைச்சின் செயலாளருக்கு வழங்குதல்.

♦ செல்லுபடியாகும் விசா கால எல்லையினைக் கடந்த வெளிநாட்டவர்களின் விசாக் கட்டணத்துக்கு மேலதிகமாக 500 அமெரிக்க டொலரை தண்டப்பணமாக அறவிடல்.

♦ வெளிநாட்டு மாணவர்களுக்காக முழுமையான கல்வி நடவடிக்கை கால எல்லைக்காக குடியிருப்பு விசாக்களை வழங்குதல்.

♦ இலங்கையில் 500,000 அமெரிக்க டொலர் நிதியினை முதலிடுகின்ற வெளிநாட்டவர்களுக்கு 10 வருட கால எல்லைக்காக குடியிருப்பு விசாக்களை வெளியிடல்.

♦ இலங்கை பிரஜையொருவர் மற்றும் விவாகமான வெளிநாட்டு வாழ்க்கை துணைக்காக 05 வருட காலத்துக்காக வாழ்க்கை துணை விசா மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கும் விசாவினைப் பெற்றுக் கொடுத்தல்.

♦ தனது இலங்கை வாழ்க்கை துணை மரணமடைந்த வெளிநாட்டு துணைக்காக மற்றும், இலங்கையினுள் 10 வருட காலம் தொடர்ந்து வசித்து வருகின்ற அல்லது 18 வயதுக்கு குறைந்த குழந்தைகள் உள்ள வெளிநாட்டு வாழ்க்கை துணைக்காக தொழில் ஈடுபடுவதற்காக 02 வருட காலத்துக்கு குடியிருப்பு விசாக்களை பெற்றுக் கொள்ளல்.

♦ இரட்டைப் பிரஜா உரிமைக்காக விண்ணப்பிக்க தகைமையற்ற, தற்போது வெளிநாடொன்றில் பிரஜாவுரிமை பெற்றுள்ள, இலங்கையர்களாகக் காணப்படுகின்ற நபர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு விசாவினைப் பெற்றுக் கொடுத்தல்.

என்பன போன்ற திருத்தங்களே கொண்டுவரப்படவுள்ளன" என்று அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார். (அ)



# குழப்பத்துக்கு காரணம் சபாநாயகர் தான்

கொழும்பு, ஜன.11

ஜனாதிபதிக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் சபாநாயருக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையிலேயே அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார். பிரதமர் ரணில் விக்ரமசிங்க நேற்று பிணை முறிப்பத்திர விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, எதிர்க்கட்சியினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, சபையைக் குழப்பினர். சபாநாயகரின் நடவடிக்கைகள் காரணமாகவே சபையில் அப்போது அமளி ஏற்பட்டதாக வாசு தேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். (அ)



# எங்கே இருக்கிறார் இவர்? தகவல் கொடுத்தால் பரிசு

யாழ்ப்பாணம், ஜன.11

"பல்வேறு குற்றச்செயல்கள் மற்றும் திருட்டு, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றசாட்டில் நீதிமன்றால் விளக்கமறியலில்வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர் தப்பி ஓடியுள்ளார். அவர் யாழ்ப்பாணம் சிறைச்சாலை அலுவலர்களால் யாழ்ப்பாணம் நீதிமன்றில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி முற்படுத்திய பின் விளக்கமறியலில் வைக்க முற்பட்ட சமயம் நீதிமன்றில் இருந்து தப்பி சென்றிருந்தார். அவர் தொடர்பான தகவல்களை வழங்குவோருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்" இவ்வாறு யாழ்ப்பாணம் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

"இந்தப் படத்தில் உள்ள நபரே தேடப்படுகிறார். தப்பி சென்று தற்போது தலைமறைவாக வாழும் இந்த நபர் யாழ்ப்பாணத்தில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்.


இவருடைய பெயர் அன்ரன் ஜெபராசா தயானந்தன். புங்குடுதீவு 11ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர். தற்போது இவர் இருக்கும் தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவே தகவல் வழங்க முடியும். சரியான தகவல் வழங்குபவர்களுக்குச் சிறந்த சன்மானம் வழங்கப்படும்" எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ)

# வித்யா வழக்கின் சாட்சிக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன.11

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் சாட்சிகளின் ஒருவருக்கு 3 மாத சிறைத் தண்டனையும், 18 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபருக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மது போதையில் வாகனம் செலுத்தியமை, வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் வாகன வரி பத்திரம் இல்லாமை உள்ளிட்ட ஆறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (அ)



# நீதி கிடைக்கும் வரை ஓயப்போவதில்லை

## சித்தார்த்தன் சூளுரை

யாழ்ப்பாணம், ஜன.11

"தமிழ் மக்களுக்கு எதிராகத் தமிழர் தாயகத்தில் நடைபெற்ற படுகொலைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும். அத்தோடு நீண்டகாலமாக நிலவும் இனப்பிரச்சினைக்கும் நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அதுவரையில் நாம் எமது போராட்டத்திலிருந்து ஓயப்போவதில்லை"என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44 ஆவது ஆண்டு நினைவேந்தலில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது இனம் மிகப்பெரிய படுகொலைகளைச் சந்தித்து வந்துள்ளது. இந்த படுகொலைகளின் வரிசையில் 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையானது தமிழ் மக்களிடையே பல அதிர்வலைகளை ஏற்படுத்த அடிப்படையாக இருந்துள்ளது.

இந்தியாவில் இருந்து வந்த தலைவர்கள், எமது தலைவர்கள், ஆகியோரது உரைகளை அப்பாவி தமிழர்கள் கேட்டு கொண்டிருந்த போது பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடத்தியதால் மின்சார கம்பிகள் அறுந்து மக்கள் துடிதுடித்து உயிரிழந்தார்கள்.

மக்கள் தமது உணர்வுகளை இது போன்ற நினைவு தினங்களில் வெளிக்காட்ட வேண்டும். மேலும் இந்தப் படுகொலைகளுக்கு நீதியாக இறுதித் தீர்வு எட்டும் வரையில் ஓயமாட்டோம்" என சித்தார்த்தன் மேலும் தெரிவித்தார். (அ)

# இன்று நாளும் கோளும்

11.01.2018 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 27 ஆம் நாள்

தசமி பகல் 11.11 மணி வரை | சுவாதி 09.21 வரை | சித்தயோகம்

இராகுகாலம் 01.30 – 03.00 | சுபநேரம் மு.ப. 10.30 – 11.30 | எமகண்டம் மு.ப. 06.00 – 07.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மறதி | உதவி | நிறைவு | தடங்கல் | தாமதம் | பிரதமை | தடை | நன்மை | தேர்ச்சி | சலனம் | ஒய்வு | நம்பிக்கை |


# பெறுபேற்றால் சோராமல் முயன்று முன்னேறுங்கள்

## மாணவர்களுக்கு முதலமைச்சர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜன.11

உயர்தர விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்த மாணவ மாணவியரின் கவனத்திற்கு.

2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்துவிட்ட நிலையில் வடபகுதி மாணவர்களில் குறிப்பிட்ட பகுதியினர் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்நிலை வகிப்பது வாழ்த்துக்குரியது. அதே போன்று கணிதத்துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற தமிழ் மாணவனின் அயரா உழைப்பும் புத்திக் கூர்மையும் பாராட்டுக்குரியது. நாம் எமது பழைய நிலைக்குச் செல்ல ஆயத்தமாகி வருகின்றோம் என்பது புலனாகின்றது.



விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்தவர்களில் முதன்மை நிலைகளை வகிக்கக்கூடிய ஒரு தொகுதி மாணவர்கள் மருத்துவத்துறை, பல் வைத்தியத்துறை, மிருக வைத்தியத்துறை மற்றும் உயிரியல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்று பல்கலைக் கழகங்களுக்கு செல்கின்ற அதே நேரம் 03 பாடங்களில் சித்தி பெற்றும் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகாத பல நூற்றுக் கணக்கான மாணவ மாணவியரில் ஒரு சிலர் இரண்டாவது தடவை பரீட்சைக்காக தம்மைத் தயார் செய்கின்ற போதும் ஏனைய மாணவர்கள் எதிர்காலம் பற்றிய எந்த வித ஆக்கபூர்வமான வழிமுறைகளும் தெரியாத நிலையில் வீட்டில் முடங்கிக் கிடக்கின்றார்கள். இதனை நான் புதன் கிழமைகளில் மக்களைச் சந்திக்கும் போது அவதானித்து வருகின்றேன். மிகச் சொற்ப மாணவ மாணவியர் தவறான முடிவுகளுக்குக்கூட சென்று விடுவது வேதனையளிக்கின்றது.

விஞ்ஞானத் துறையில் 03 பாடங்களில் சித்தியடைந்த மாணவ மாணவியர்க்கு தாதியர் சேவை, மருந்தாளர் சேவை, கதிரியக்கவியலாளர் சேவை, கண் காது தொழில்நுட்பவியலாளர் சேவை, ஆய்வுகூடப் பரிசோதகர் சேவை, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சேவை என பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புக்கள் அதி கூடிய ஆரம்பச் சம்பளத்துடன் இருக்கின்ற போதும் இந்த மாணவ மாணவியர் அவற்றில் ஆர்வம் காட்டாது சோம்பி இருக்கின்றமை தவிர்க்கப்படவேண்டியது. பலருக்கு இவ்வாறான இடைவெளிகள் இருப்பது பற்றித் தெரியாதுள்ளது.

அதே போன்று உயிரியல் துறையில் இரு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் கூட குண்டசாலை விவசாயக் கல்லூரி, வவுனியா விவசாயக் கல்லூரி, அம்பாறை ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் இணைந்து கொண்டு விசேட தேர்ச்சிகளைப் பெறலாம். எதிர்பார்க்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்களுக்கு மேலதிகமாக ஊதியங்களைப் பெறவும் தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவும் வழிவகைகள் காணப்படுகின்ற போதும் இவை பற்றிய விழிப்புணர்வுகளை எம் மாணவர்களிடையே எடுத்துச் செல்லாத காரணத்தால் அவர்களில் பெரும்பாலானவர்கள் இவை பற்றி அறியாது அல்லது அதிகளவு நாட்டம் காட்டாமல் இருந்து விடுகின்றார்கள்.

எந்தத் துறை மீது ஆர்வம் இருக்கின்றதோ அந்தத் துறையில் மாணவ மாணவியர் தொடர்ந்து கற்பதற்கும் முன்னோக்கிப் பயணிப்பதற்கும் உயர்ந்த பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வழிவகுக்கக்கூடிய கல்வித் துறைகளை தேர்ந்தெடுக்க முன் வர வேண்டும். எமது எல்லா மாணவ மாணவியரின் எதிர்காலமும் சிறப்புற விளங்க ஆசீர்வதிக்கின்றேன்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மகிந்த காலத்தில் நடந்த மோசடிகளை விசாரிக்குக

## ரணில் கோரிக்கை

கொழும்பு,ஜன.11



பிணைமுறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில் 2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான மகிந்தவின் ஆட்சிக் காலப் பகுதியிலும் முறைகேடுகள் இடம் பெற்றுள்ளன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வில் அறிக்கையொன்றை விடுத்து பிரதமர் உரையாற்றினார்.

"நல்லாட்சி அரசு நாட்டின் நிதி நிர்வாகத்தை நாடாளுமன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. 2015ஆம் ஆண்டு திறைசேரி கொடுக்கல் வாங்கலுக்கு அமைவான பணிகள் இதனூடாக இடம் பெற்றன. இதுபற்றி நாடாளுமன்றத்தின் கோப் குழு நீண்ட விசாரணையை நடத்தியது. திறைசேரி கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பது அவசியம்.

2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத இறுதியில் இதனுடன் தொடர்புடைய இரண்டு அறிக்கைகள் நாடாளுமன்ற சபை முதல்வரின் செயலாளரின் ஊடாக திறைசேரியின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இது தொடர்பாக சட்டமா அதிபர் கோரியிருந்த சகல அறிக்கைகளையும், ஆவணங்களையும் சபாநாயகரின் அங்கீகாரத்துடன் சட்டமா அதிபருக்கு அனுப்புமாறு நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களம் தனியான சட்டத்தரணிகள் குழுவை நியமித்து இது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சட்டமா அதிபருக்கு இதுபற்றி எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பேர்ச்சுவல் ட்ரஸரீஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான 12 பில்லியன் ரூபாவை மத்திய வங்கிபொறுப்பேற்றுள்ளது. ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கைக்கு அமைவாக திறைசேரி கொடுக்கல் வாங்கலின் ஊடாக மத்திய வங்கிக்கு ஏற்பட்ட நட்டம் 11 பில்லியன் ரூபாவாகும். இதற்கு அமைவாக, சட்டமா அதிபர் ஊடாக நீதிமன்றில் வழக்குகளை விசாரித்து அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்துகொள்ளவேண்டும். இலங்கையின் வரலாற்றில் இவ்வாறான விசாரணை நியாயமான முறையிலும், பக்கச் சார்பின்றியும் நடத்தப்பட்டுள்ளமை இதுவே முதலாவது முறை.

மகிந்தவின் காலத்தில் , 2008ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பெரும்பாலான திறைசேரி முறிகள் நேரடி, தனிப்பட்ட வெளியீட்டு முறையிலேயே இடம் பெற்றுள்ளன. இவற்றில் எந்த வெளிப்படைத் தன்மையும் இருக்கவில்லை.

நிதிச் சபையின் அனுமதி இதற்காக பெற்றுக் கொள்ளப்படவில்லை. இந்தக் காலப்பகுதியில் இடம்பெற்ற திறைசேரி கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணைகளை நடத்த நாடாளுமன்றம் அரச நிதிக் குழுவின் தலைவருடன் பேச்சு நடத்தப்படும் - என்றார். (அ)

## மழை பெய்யும்

கொழும்பு, ஜன.11

நாட்டின் கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் மற்றும் பொலனறுவை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் இன்று ஓரளவு மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.


பிற்பகல் 2 மணியின் பின்னர் பல பிரதேசங்களில் குறிப்பாக வடக்கு, மத்திய , வடமேற்கு, மேல் மாகாணம் மற்றும் அநுராதபுரம் கேகாலை மாவட்டங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 125 வீடமைப்பு திட்டங்கள் வடக்கில்

கொழும்பு,ஜன.11

வடக்கில் நிலவும் வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பதற்கான திட்டம் விரைவில் நடைமுறைப் படுத்தவுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் லக்விஜய சாகல பலன் சூரிய தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் மூவாயிரம் மில்லின் ரூபா நிதி முதலீட்டில், வடக்கில் 125 வீடமைப்புத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)



## தமிழரசுக் கட்சி ஒரு தடிக்குப் போடுங்கோ எண்டாலும் தமிழ் சனம் போடுமாம்

நல்ல வெய்யில் எறிக்கிதெண்டு பாத்தால் திடீரெண்டு மழை வந்திட்டிது. ஆனால் பெரு மழை இல்லை. தூறல்தான். ஒரு பகுதி சொல்லுது பயிருக்கு நல்லதாம். இன்னொரு பகுதி சொல்லுது பத்தாதாம். என்னெண்டாலும் மழை பெய்திருக்கெண்டது ஒரு ஆசுவாசமான விசியம்.

காலமை நல்ல குளிர். பேப்பர் கடைக்குக் கொஞ்சம் சுணங்கித்தான் போறனான். முதலியும் தோட்ட வேலை முடிஞ்சுவரக் கணக்கா இருக்கும். நேற்றைக்கு ஒரு பழைய கதை ஒண்டோடை வந்தான். பழசெண்டாலும் சனம் அதை அறிய வேணும்.

என்னெண்டால் நாங்கள் முழுக்க முழுக்க நம்பியிருந்த தமிழ் தேசியக் கூட்டமைப் பைத்தானே? இப்ப கயிறு அறுந்த பட்டம் மாதிரி அப்ப எங்கை போகுது? ஏது செய்யிதெண்டு தெரியாமல் கிடக்கு. ஆளுக்காள் ஒவ்வொரு கதை. நேரம் ஒரு கதையைச் சொல்லுறவை எங்கடை பிரச்சினையை எப்பிடிச் சரியாய்ச் செய்வினமெண்டு எதிர்பார்க்கிறது.

முந்தி ஒருக்காச் சம்பந்தர் சொன்னவர் தான் புலியளின்ரை கொலைப் பட்டியலிலை இருந்தவர் எண்டு. பிறகு அந்தக் கதையைக் காணேல்லை. பிறகு மாவை இப்ப சொல்லுறார் புலியள் இல்லாதது தெரியிது. அவையில்லாததாலை ஜனநாயகம் இல்லாமைப் போச்சுதெண்டமாதிரிப் பேசியும் இருக்கிறார். உதேன் இப்ப உந்தக் கதை வருகிதெண்டு தெரியேல்லை. புலியளைத் துலைக்க வேணுமெண்டு திரைமறைவு நாடகமாடினது ஆரெண்டு சனத்துக்குத் தெரியாட்டிலும் அதைச் செய்தவைக்குத் தெரியுந்தானே? பிள்ளையையும் நுள்ளித் தொட்டிலையும் ஆட்டிப்போட்டு இப்ப நிண்டு கண்ணீர் வடிக்கிறதைப் பாத்தால் உவங்கடை அழுகையை உண்மை எண்டு ஆக்கள் நம்பிவிடுவினம்.

சுமந்திரன் தன்ரை பாட்டுக்கு முடிவெடுத்து அரசாங்கம் செய்யிறதுதான் சரி நாங்கள் எல்லாம் பஜனை பாடிக்கொண்டு அவைக்குப் பின்னாலைதான் போக வேணுமெண்டு நாண்டு கொண்டு நிக்கிறார். அதைப் பிழை எண்டு சொல்லுறவையைப் பேசிறதும் அவையளிலை பாஞ்சு விழுகிறதுமாக் கிடக்கு அவற்றை வேலை. கடைசியாப் போன கிழமை சொல்லுறார் ஊடகங்கள் திருந்த வேணும். இல்லாட்டித் திருத்துவன் எண்ட மாதிரி அவற்றை கதை. அரசியலுக்கு வந்தது இப்பதான். கதையைப் பாத்தால் தந்தை செல்வாட்டை அடி வேண்டிப் படிச்சனான். அவற்றை சீலை துணி தோச்சுக் குடுத்துக் குரு சீடன் வழியிலை அரசியல் படிச்சு வந்தனான் எண்ட மாதிரிக்கிடக்கு.

மகிந்தாவை நிண்டு கெடுத்தான் அவற்றை தம்பி பசில். இஞ்சை நிண்டும் கிடந்தும், இருந்தும் சம்பந்தரைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கினார் சுமந்திரன் எண்டு கெட்ட பேர் எல்லே வரப்போகுது. உவருக்கு நல்லது கெட்டதைச் சொல்லிக் குடுக்க ஆக்களில்லையே? பாவம் ஆரேன் அவருக்கு அறிஞ்சாக்கள் இருந்தால் விசியத்தைச் சொல்லிக் குடுங்கோவன். கேட்டாவது திருந்தட்டும்.

ரொக்கமாப் பாத்தால் எங்களிலைதான் பிழை. தமிழரசுக் கட்சியிலை இருந்த ஒரு பெரிய ஆள் சொன்னவராம், ஒரு தடியைக் கொண்டு வந்து வைச்சுக் கொண்டு இதுக்குப் போடுங்கோ எண்டு தமிழரசுக் கட்சி சொன்னால் தமிழ் சனங்கள் கண்ணை மூடிக் கொண்டு போடுங்கள் எண்டு சொல்லி இருக்கிறார். அப்ப அவைக்கு தமிழ் சனம் படிக்காத இழிச்சவாயாக் கிடக்கு. அவைக்கு அந்தக் கிரிச கெட்ட பழக்கத்தைப் பழக்கினது நாங்கள் எல்லே? அப்ப அவையைச் சொல்லிக் குற்றமில்லை, என்ன? விநாசி சொல்லுறது பிழையே? இந்த விநாசி சரியைச் சரியெண்டும், பிழையைப் பிழை எண்டுந்தான் சொல்லுவன் ஒரு நாளும் பிழையைச் சரியெண்டு சொல்லமாட்டன். விளங்கினால் சரி! போட்டு வாறன்!

- வில்லங்கம் விநாசி

# நீதி வென்றது: இடமாற்றம் ரத்து



## ஆசிரியை மீதான பழிவாங்கலுக்கு நீதிமன்றம் வைத்தது ஆப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

"யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலையொன்றின் சங்கீத ஆசிரியைக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் வழங்கப்பட்ட நிபந்தனையுடனான இடமாற்றல் கடிதம் நீக்கப்படுகிறது. அந்த ஆசிரியைக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை அறிக்கைக்கு அமைவாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க முடியாது" இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று அதிரடித் தீர்ப்பை வழங்கினார்.

"குறித்த ஆசிரியைக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதம் மீளப்பெறப்படுகிறது. அவருக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படாது" என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்பட்ட அறிக்கையையடுத்தே மேல் நீதிமன்றம் இந்தக் கட்டளையை வழங்கியது.

குறித்த ஆசிரியை பாடசாலையில் நடைபெற்ற, மாணவிகள் மீதான ஆசிரியரொருவரின் கொடுமைகளை வெளிக்கொணர்ந்ததால், பழிவாங்கல் நடவடிக்கையாக அவருக்கு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கடந்த நவம்பர் 11ஆம் திகதியிடப்பட்ட இடமாற்றல் கடிதம் வழங்கப்பட்டது.

"முறையான ஒழுக்காற்று விசாரணை முடிவுகளின் அடிப்படையில் யாழ். மாவட்டத்துக்கு வெளியே இடமாற்றம் செய்யப்படல் வேண்டும் என்ற பரிந்துரைக்கு அமைவாக 01.01.2018 இலிருந்து செயற்படும் படியாக தாங்கள் கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றீர்கள். அத்துடன் தங்களுடைய சேவைக்காலத்தில் மீண்டும் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது என்ற நிபந்தனையுடன் இந்த இடமாற்றம் வழங்கப்படுகின்றது" என்று அந்தக் கடிதத்தில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளரால் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கு எதிராக குறித்த ஆசிரியை சார்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. மனுதாரரான ஆசிரியை தனது சட்டத்தரணி ஊடாக மன்றில் முன்னிலையானார்.

எதிர்மனுதாரர்களான வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.

இரண்டாவது எதிர்மனுதாரரான வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் மன்றுக்கு அறிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டது. அதில் "ஆசிரியைக்கு வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதம் மீளப்பெறப்படுகிறது. அவருக்கு எதிராக எந்த ஒரு ஒழுக்காற்று நடவடிக்கையும் மேற்கொண்டு முன்னெடுக்கப்படாது" என அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையை ஆராய்ந்த மன்று, மனுதாரின் ஆட்சேபனையை கேட்டது. மனுதாரருக்கு எதிரான அனைத்து ஒழுக்காற்று நடவடிக்கைகளும் நீக்கப்படுவதால் அதனை ஏற்றுக் கொள்வதாக மனுதாரரின் சட்டத்தரணி மன்றுக்கு விண்ணப்பம் செய்தார்.

"மனுதாரரான ஆசிரியைக்கு கடந்த நவம்பர் 11ஆம் திகதி வழங்கப்பட்ட இடமாற்றல் கடிதம் மன்றினால் தடை செய்யப்படுகிறது. அந்தக் கடிதம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாது என எழுத்துமூலமான கடிதத்தை மேல் நீதிமன்றப் பதிவாளரிடம் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் முன்வைக்கவேண்டும். ஆசிரியைக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையின் அடிப்படையில் அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாது" என்று மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கட்டளையிட்டார். (அ)

## அந்தநாள் ஞாபகம்




**11.01.1782**

சேர் எட்வேர்ட் ஹியூஸ், சேர் எக்டர் மன்றோ தலைமையில் பிரித்தானியர்கள் திருகோணமலையைக் கைப்பற்றினர்.

## தயா மாஸ்டர் மீது தாக்கு: கண்டிக்கிறார் சீ.வி.கே

யாழ்ப்பாணம்; ஜன.11

தயா மாஸ்டர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.சே. சிவஞானம் கண்டித்துள்ளார்.

"யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியிலுள்ள டான் தொலைக்காட்சி நிறுவனத்துக்குள் கடந்த 8 ஆம் திகதி அத்துமீறிப் புகுந்த நபர் ஒருவர் அந்த நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதி மீது மேற்கொண்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தாக்குதலாளி அலுவலகத்தில் புகுந்து அவர்மீது கடுமையாகத் தாக்குதல் நடத்தியதுடன் கத்தியால் குத்தி கொலை செய்யவும் முற்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஊடக சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்டுள்ள பெரும் அச்சுறுத்தலாகும்.

இந்தத் தாக்குதல் திட்டமிட்ட செயலாகவே காணப்படுகின்றது. சம்பவத்தின் பின்னணிகள் குறித்து முழுமையான விசாரணைகள் செய்யப்பட்டு குற்றவாளிகள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்" என இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



## இராட்சத இராசவள்ளி

வவுனியா, ஜன.11

வவுனியா - பட்டாணிச்சூரில் ஒருவரின் வீட்டுத் தோட்டத்தில் சுமார் 10 மாதங்களில் 30 கிலோ கிராம் எடையுடைய இராசவள்ளிக் கிழங்கு ஒன்று விளைந்துள்ளது. வவுனியாவில் பிரபல சுப்பர் மார்கெட் உரிமையாளரான ஆ.இராஜேந்திரன் என்பவரின் வீட்டுத் தோட்டத்திலேயே இந்த கிழங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலேலேயே இதுவரை விளைந்த இராசவள்ளிக் கிழங்குகளில் இதுவே மிகப்பெரியது எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த இராட்சத இராசவள்ளிக் கிழங்கைப் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றனர். (அ)

## நியமனத்தில் முறைகேடு: முதல்வரிடம் முறையீடு

யாழ்ப்பாணம், ஜன.11

2017 ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு கடந்த மூன்று மாதங்கள் பயிற்சியின் முடிவில், மத்திய கல்வி அமைச்சால் வடமாகாணத்துக்கு விடுவிக்கப்பட்ட இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த மட்டுப்படுத்தப்பட்ட அலுவலர்களுக்கான நிலையங்களை வழங்குவதில் முறைகேடு இடம்பெற்றுள்ளது என முதலமைச்சரிடம் முறையிடப்பட்டுள்ளது.


அது தொடர்பாக வடமாகாணக் கல்விச் செயலாளரிடம் முதலமைச்சர் விளக்கம் கேட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியில் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு நியமனங்கள் மற்றும் சேவை நிலையங்கள் வழங்கும் போது பரீட்சையில் பெற்ற புள்ளி ஒழுங்கில் தெரிவு வழங்கப்படல் வேண்டும் என்பது நடைமுறை விதி இல 80:130 கூறப்பட்டுள்ளது. இதை மீறி வடமாகாண கல்வி அமைச்சர், செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் முறையற்ற வகையில் தமக்கு சார்பானவர்களுக்கு மட்டும் பொருத்தமாக நியமனங்களை வழங்கி அலுவலர்களது திறமையையும் சேவை ஈடுபாட்டையும் கேள்விக்குறியாக்கியுள்ளனர்.

இத்தகைய மேலதிகாரிகளது தான்தோன்றித்தனமான முறைகேடான நடவடிக்கைகளே வடமாகாண கல்வி அதலபாதாளத்துக்குள் தற்போது விழுந்துள்ளமைக்கான காரணம் என கல்விச் சமூகத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் மேன்முறையீடு செய்த போதும் தேர்தலின் பின்னரே மேன்முறையீட்டு சபை கூடும் என. செயலாளர் கடிதம் அனுப்பியுள்ளார். நியமனம் வழங்கியவர்களே மேன்முறையீட்டு சபையில் இருப்பின் அவர்களால் முன்னைய தவறை ஏற்று நியாயம் வழங்க முடியாது என பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

"எனவே முதலமைச்சர் நீதியான விசாரணைக்குழுவை நியமித்து, நியாயத்தைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் வடமாகாண கல்வி வளர்ச்சியை உறுதிப்படுத்த வேண்டும். முன்னைய கல்வி அமைச்சர் முறைகேடு செய்கிறார் என்றே தற்போதைய கல்வி அமைச்சர்



முதலமைச்சரால் நியமிக்கப்பட்டார் அவரும் இந்த நியமன விடயத்தில் முதலமைச்சரின் நம்பிக்கையை சிதறடித்ததுடன் தனது சுயரூபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தற்போது ஒரே நம்பிக்கை மக்களுக்கும் கல்விச்சமூகத்துக்கும் முதலமைச்சர் மட்டுமே என்பதால் அவரின் துணிவான நீதியான நடவடிக்கை மூலம் இந்நியமன செயற்பாடுகளின் முறைகேட்டை விசாரித்து நீதியைப் பெற்றுத்தர வேண்டும்" எனப் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# சட்டவிரோத கேபிள் இணைப்பு நேற்று அதிகாலை முதல் அறுப்பு

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி வழங்கப்பட்ட கேபிள் இணைப்புகள் நேற்று அதிகாலை முதல் அறுத்து அகற்றப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வந்த தொலைத்தொடர்பு ஆணைக்குழு அதிகாரிகளாலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அரசின் அனுமதிப் பத்திரமின்றி தொலைக்காட்சி அலைவரிசைகளின் கேபிள் இணைப்பை வழங்க முடியாது என தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

சட்டவிரோத கேபிள்கள் அனைத்தையும் டிசெம்பர் 31ஆம் திகதிக்குள் அகற்றுமாறும் அது கேட்டுக்கொண்டது. எனினும் அவை அகற்றப்படவில்லை.

இந்த நிலையில் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் வந்தனர். ஒவ்வொரு பகுதிகளுக்கும் சென்று சட்டவிரோத கேபிள் இணைப்புகளை அவர்கள் அறுத்து அகற்றினர்.

மேலும் சட்டவிரோதமாக கேபிள் இணைப்பை வழங்கியவர்களின் சேவை நிலையத்தை முற்றுகையிட்டு, அங்குள்ள தொழில்நுட்ப சாதனங்களை அரசுடமையாக்கும் பணிகளையும் அதிகாரிகள் முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாணத்தில் ஆஸ்க் மீடியா என்ற நிறுவனம் மட்டுமே அனுமதிபெற்ற கேபிள் சேவை வழங்குநர் என அதிகாரிகள் குறிப்பிட்டனர். (அ)

## சிறுமியைக் கடத்திய மாமானார் கைது

கொழும்பு,ஜன.11

குருணாகல் நகரில் முன்பள்ளி பயிலும் சிறுமியை கடத்திச் செல்ல முயற்சித்த சம்பவம் தொடர்பாக, சிறுமியின் மாமானாரைப் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

குருணாகல் பௌத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள முன்பள்ளியில் இந்தச் சம்பவம் கடந்த 4 ஆம் திகதி நடந்துள்ளது. சிறுமி முன்பள்ளி முடிந்து தனது பாட்டியுடன் வீட்டுக்கு சென்றுக்கொண்டிருந்த போது, சந்தேகநபர் சிறுமியை கடத்திச் செல்ல முயற்சித்துள்ளார். அப்போது பாட்டி தலையிட்டு குழந் தையை காப்பாற்றினார். எனினும் சந்தேகநபர் தப்பியோடிவிட்டார்.

இந்த நிலையில், சந்தேக நபர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## பிக்குவையும் விடாத காமுகன் மறியலில்

கொழும்பு,ஜன.11

பஸ் நிலையத்தில் காத்திருந்த 17 வயதான இளம் பிக்கு பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் ஹர்சன கெக்குனுவெல நேற்று உத்தரவிட்டுள்ளார். பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பௌத்த பிக்கு சம்பந்தமாக சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவப் பரிசோதனை அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் நீதவான் அநுராதபும் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (அ)

## இன்றைய கேலிச்சித்திரம்




## பெண்களும் இனி மதுவை விற்கலாம்

கொழும்பு,ஜன.11

மதுபானத் தயாரிப்பு மற்றும் மதுபான விற்பனை நிலையங்களில் பணியாற்றுவதற்கு பெண்களுக்கு விதிக்கப்பட்ட தடையை மீளப் பெறுவதாக, நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

மதுபானத் தயாரிப்பு மற்றும் விற்பனை நிலையங்களில் பெண்களைப் பணிக்கு அமர்த்துவது மற்றும் பெண்களுக்கு மதுபானங்களை விற்பனை செய்வது போன்றவற்றுக்கு இலங்கையில் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு விதிக்கப்பட்ட தடையையே நிதியமைச்சு மீளப்பெற்றுள்ளது. (அ)

## 2018 முதல் வாரத்திலேயே 948 டெங்கு நோயாளிகள்

கொழும்பு,ஜன.11

2018 ஆம் ஆண்டின் முதல் வாரத்திலேயே இலங்கை முழுவதும் 948 டெங்கு நோயாளர்கள் வரை இனங்காணப்பட்டுள்ளதாக, தேசிய டெங்கு தடுப்பு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆயினும் கடந்த வருடத்தின் ஆரம்ப வாரத்துடன் ஒப்பிடுகையில் இது குறைந்தளவானதே என, அப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, 'வோல்பாஷியா' என்ற பக்ரீரியாவின் உதவியுடன் டெங்கு நுளம்பை ஒழிக்கும் வேலைத் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசின் உதவியுடன் முன்னெடுக்க, அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

டெங்கு நுளம்புகளை ஒழிப்பது தொடர்பில் 'வோல்பாஷியா' பக்ரீரியாக்களை பயன்படுத்தும் முயற்சி அவுஸ்திரேலியாவின் மொனெஸ் பல்கலைக்கழகத்தில் வெற்றிகரமான பரீட்சிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த முறை அவுஸ்திரேலியா, இந்தோனேஷியா, வியட்நாம், பிரேசில் மற்றும் கொலாம்பியா போன்ற நாடுகளில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க அமைச்சர் ராஜித சேனாரத்னவால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. (அ)

# தொடர்ச்சிகள்

### கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை மீட்கப்பட்டு, மாவட்ட வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற பஸ் தரிப்பிட கட்டடத்துக்குள் சிசு ஒன்று இருப்பதனை பொதுமக்கள் அவதானித்தனர். அதனையடுத்து அவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதனை அடுத்து குறித்த சிசு மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சிசுவைக் கைவிட்டு சென்ற பெற்றோர் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். (அ-13)

### அமளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடுவே நின்றபடி அவர்கள் " யார் ..யார் கள்ளன்...ரணிலே கள்ளன்" என்று கோஷமிட்டனர். பதிலுக்கு ஆளும் கட்சியினரும் "யார் யார் ...கள்ளன்..மகிந்தவே கள்ளன்" எனப் பதிலடிக் கோஷமிட , சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதனால் நாடாளுமன்றம் 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டு கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. மீண்டும் நாடாளுமன்றம் கூடிய போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து உரையாற்றினார்.

அப்போது கூட்டு எதிரணியினரும், ஜே.வி.பி.யினரும் குழப்பம் விளைவித்தனர். சிறிது நேரத்தில் இந்தக் குழப்பம் கைகலப்பாக மாறியது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் சொய்சா சிறு காயங்களுக்கு உள்ளானார். அவருக்கு நாடாளுமன்ற வளாகத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்தன மயக்கமுற்று, நாடாளுமன்ற மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார். பிரதமர் தலையிட்ட பின்னரே ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சியினரும் மோதுவதில் இருந்து விடுபட்டனர்.

இந்தக் கைகலப்பின் போது, சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணிந்திருந்த சட்டைகளும் கிழிந்தன.

இதைத் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் உரையாற்றிய போதும், சிறப்பு அமர்வுக்கு அழைப்பு விடுத்த எதிரணியினர் சபையில் இல்லாதால் நாடாளுமன்றத்தை ஒத்திவைக்க லக்ஸ்மன் கிரியெல்ல கோரினார்.

இதனால் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு சபை அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் முதல் அமர்விலேயே நாடாளுமன்ற அமர்வுகள் அமளிதுமளியில் முடிந்தமை குறித்து ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (அ)

### அநீதிக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறும் வகையில் சர்வதேச சமூகமும், தமிழ்த் தலைவர்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன்.

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவேந்தலில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு உரைநிகழ்த்தினார்.

"இன அழிப்பின் ஒரு கட்டமாக 1974 ஆம் ஆண்டு ஆரம்பித்த இனஅழிப்பு இன்று வரை முடிவுறாத நிலையில் கட்டமைக்கப்பட்டு தொடர்ந்து வருகின்றது. எனவே இன அழிப்பைத் தொடர்ந்து செய்து வருகின்ற அரசாங்கம் பொறுப்பு கூறலில் இருந்து தப்பித்து வருகின்றது.

எனினும் இந்தப் படுகொலைகளுக்கு நீதியை பெற்றுக்கொள்ள அழுத்தங்களை கொடுக்க வேண்டிய நிலையில் தமிழர் தரப்பு தற்போது இருந்து வருகின்றது. எங்களுடைய தமிழ்த் தலைவர்களும், சர்வதேச சமூகமும் இலங்கை அரசுக்கு அழுத்தங்களை வழங்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளது. இந்தப் பொறுப்புக்களில் இருந்து நாம் விலகி விட முடியாது.

காலம் காலமாக எங்களுடைய மக்கள் கொல்லப்பட்ட இடங்களில் இவ்வாறான நினைவுத் தூபிகள் கட்டியெழுப்பட வேண்டும். இந்த நினைவுத் தூபிகள் மூலமே எம்மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை வெளிப்படுத்த முடியும்.

இந்த நினைவுத் தூபிகளை அமைப்பதற்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு நினைவு தூபிகளையும் ஒவ்வொருவர் பொறுப்பெடுத்து கட்ட வேண்டும்.

கொல்லப்பட்டவர்கள் நினைவாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி திட்டங்களையும் வழங்க வேண்டும். இதன் மூலம் இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்டவர்கள் தமிழர் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்கள்" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

### அச்சத்தாலேயே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டும் அளவுக்குச் செல்கின்றனர். இதனாலேயே ஊடகங்கள் திருந்தவேண்டும்,இல்லையேல் திருத்தப்படுவீர்கள் என அதிகாரத்தின் உச்சாணிக்கொப்பில் நின்றபடி மிரட்டியிருக்கிறார்" இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கூட்டமைப்பின் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டமொன்றில், ஊடகங்கள் மீது கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் மிரட்டும் தொனியில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதனைக் கண்டித்தே சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கையொன்றை நேற்று வெளியிட்டார்.

"புதிய அரசியல் சாசனம் தொடர்பாக இடைக்கால அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டிருப்பதும், அந்த இடைக்கால அறிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகியிருப்பதும், சம்பந்தன், சுமந்திரன் போன்றோரை சீற்றமடைய வைத்திருக்கிறது. தாங்கள் கூறும் கருத்துக்களை மட்டுமே ஊடகங்கள் காவிச் செல்ல வேண்டும் என்று விரும்புபவர்கள் ஏனையோரின் கருத்துக்கள் ஊடகங்களில் வருகையில், பதற்றப்பட்டு, அஞ்சி ஊடகங்களை மிரட்டும் அளவுக்குச் செல்கின்றனர். இந்த இடைக்கால அறிக்கை தொடர்பாக தமிழர் தரப்பில் சம்பந்தன் சுமந்திரனைத் தவிர, இது நியாயமானது என்று எடுத்துச் சொல்வதற்கு தமிழரசுக் கட்சியில் கூட யாருமில்லை. இதனால் தான் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து பொதுவெளியில் விவாதிக்கவோ இல்லையேல் தமது கருத்துக்களை முன்வைக்கவோ முடியாமல் மௌனம் சாதிக்கின்றனர்.

தமிழ்ச் சமூகமானது ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக பல ஊடகவியலாளர்களைபலிகொடுத்திருக்கின்றது. ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் தமிழ்மக்களும் தமிழ் ஊடகவியலாளர்களும் கணிசமான பங்கினைச் செலுத்தியிருக்கின்றார்கள். ஆனால் அண்மையில் அரசியலுக்கு வந்த சுமந்திரன், ஊடகங்கள் திருந்த வேண்டும் அல்லது திருத்தப்படுவீர்கள் என்று மிரட்டுவதானது அதிகாரத்தின் உச்சாணிக் கொப்பிலிருந்து அவர் பேசும்பேச்சாக இருக்கின்றது.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஊடகவியலாளர்களையும் அரசாங்கத்தை விமர்சிப்போரையும்'வெள்ளை வானில் கடத்திச் சென்று கொலை செய்வது என்பது'சர்வ சாதாரணமான விடயம். அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டோரை அரசாங்கம் ஆதரவளித்து அவர்களைப் பாதுகாத்தது. இன்று சுமந்திரன் ஊடகங்களுக்கு விடுத்துள்ள மிரட்டலைப் பார்க்கின்றபோது இவர் யாருடைய ஆதரவின்பேரில் இத்தகைய மிரட்டல்களை விடுகிறார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

எமதுகட்சி இவ்வாறான மிரட்டல்களையும் அச்சுறுத்தல்களையும் வன்மையாகக்கண்டிப்பதுடன், ஊடக சுதந்திரம் என்றென்றும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றது." என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### பூசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விறுமர் ஆலயத்தில் நித்திய பூசை செய்து வரும் பசுபதி திருலோகநாதன் (வயது - 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் நேற்றைய தினம் எந்தவித உடல் நல கோளாறும் இன்றி நலமாகவே பூசை செய்ய வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளார். அங்கு பூசை செய்வதற்கு முன்னாயத்தமாக கோவில் மண்டபத்தை கழுவ, கிணற்றில் தண்ணீர் அள்ளியபோது அவருக்கு திடீரென நெஞ்சுக்குத்து ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கோயில் மண்டபத்திலேயே வீழ்ந்த அவரின் உயிர் அங்கேயே பிரிந்துள்ளது.

பின்னர் அவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இது குறித்த மேலதிக விசாரணைகள்க் கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

### அஞ்சலிக்க...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே நேற்றைய நினைவேந்தலில் கலந்துகொண்டிருந்தனர்.

இதே வேளை இந் நினைவு தின நிகழ்வுகள் காலை 9.30 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்த போதும் குறித்த நினைவு தூபியும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் புற்களும் குப்பைகளும் நிறைந்து துப்பரவு செய்யப்படாமலேயே காட்சியளித்தன.

இதன்போது, அங்கு வருகை தந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ. பரஞ்சோதி மேற்படி நினைவுத் தூபிப் பிரதேசத்தை துப்புரவு செய்து தருமாறு மாநகர சபையிடம் கேட்டுக்கொண்டார்.

இதன் பின்னரே அங்கு வந்த மாநகர சபையினரோடு இணைந்து அஞ்சலி செலுத்த வந்த அரசியல்பிரமுகர்களும் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். அதன் பின்னரே 10 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# விஜய்சேதுபதியை தீட்டும் மணி

சென்னை, ஜன. 11

மணிரத்னம் இயக்கத்தில் பிரபல நட்சத்திரங்கள் பலரும் இணையவிருக்கும் படத்தில் விஜய் சேதுபதியின் கதாபாத்திரத்துக்கு இயக்குநர் முக்கியத்துவம் கொடுப்பதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

விஜய் சேதுபதி நடிப்பில் அடுத்ததாக 'ஒரு நல்ல நாள் பாத்து சொல்றேன்', 'இமைக்கா நொடிகள்' படங்கள் விரைவில் வெளியாகவுள்ளன.

இதுதவிர விஜய் சேதுபதி தற்போது 'சூப்பர் டீலக்ஸ்', '96', 'சீதக்காதி', 'ஜூங்கா' உள்ளிட்ட படங்களில் நடித்து வருகிறார். விரைவில் சிரஞ்சீவியுடன் இணைந்து 'சயீரா நரசிம்ம ரெட்டி' படத்திலும் நடிக்கவுள்ளார். அதேநேரத்தில் மணிரத்னம் இயக்கத்தில் நடிக்கவும் ஒப்பந்தமாகி இருக்கிறார்.

அந்தப் படத்தில் விஜய் சேதுபதியுடன் அரவிந்தசாமி, சிம்பு, பகத் பாஷில், ஜோதிகா, ஐஸ்வர்யா ராஜேஷ் உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர்.

அக்ஷன் கலந்த த்ரில்லர் படமாக உருவாக இருக்கும் இந்தப் படத்தில் விஜய் சேதுபதிக்கு முக்கியமான, சிறிய கதபாத்திரத்துக்குத்தான் மணிரத்னம் கதை எழுதினாராம். ஆனால் தற்போது விஜய் சேதுபதியின் கதாபாத்திரத்தின் முக்கியத்துவத்தை இயக்குநர் நீட்டித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (ஐ)

# பொங்கலில் 'தடம்'




சென்னை, ஜன. 11

மகிழ் திருமேனி இயக்கத்தில் அருண் விஜய் - தன்யா ஹோப் - வித்யா பிரதீப் - ஸ்மிருதி வெங்கட் நடிப்பில் உருவாகி வரும் 'தடம்' படத்தின் டீசர் வெளியீடு குறித்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

அருண் விஜய் நடிப்பில் கடைசியாக வெளியான 'குற்றம் 23' படம் நல்ல வரவேற்பைப் பெற்றதைத் தொடர்ந்து, அவர் தற்போது 'தடம்' படத்தில் நடித்து வருகிறார். இந்தப் படத்தின் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை எட்டியிருக்கும் நிலையில், படத்தின் டீசரை பொங்கலை முன்னிட்டு வெளியிட படக்குழு முடிவு செய்துள்ளது. (ஐ)

# சிலந்தியைக் கொல்ல வீட்டைத் தீயிட்ட அமெரிக்கர்

லொஸ்ஏஞ்சல்ஸ், ஜன. 11

அமெரிக்காவின் கலிபோர்னியாப் பகுதியில் சிலந்திப் பூச்சியைத் தீயிட்டுக் கொல்ல முயன்றபோது வீடு முழுவதும் எரிந்தது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் லொஸ் ஏஞ்சல்ஸ் பகுதியைச் சேர்ந்த ஒருவர், அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிக்கிறார். அவரது வீட்டில் மிகப்பெரிய சிலந்தி பூச்சி இருந்தது. அதை தீயிட்டு கொல்ல முயன்றார்.

அப்போது அந்தத் தீ வீட்டில் இருந்த திரைச்சீலையில் பிடித்து பொருட்கள் மீதும் பரவியது. பின்னர் தீ வீடு முழுவதும் எரிந்தது. உடனே தீயணைப்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் விரைந்து வந்து தீயை போராடி அணைத்தனர். (ஐ)

# அமெரிக்காவில் அனர்த்தம்!



கலிபோர்னியா, ஜன. 11

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் கடும் மழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ள நிலையில், அங்கு நிகழ்ந்த நிலச்சரிவில் 13 பேருக்கும் மேலானோர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும், 163 பேர் வரை வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரியவருகிறது.

அமெரிக்காவின், கலிபோர்னியாவில் கடும் மழை பெய்துவருகிறது. இதன் காரணமாக 13 பேர் உயிரிழுந்துள்ளனர் எனவும், கிழக்கு சாண்டா பார்பராவில் உள்ள ரோமியோ கன்யோனில் 300 பேர் வரையிலானோர் சிக்கியிருக்கின்றனர். இவர்களை மீட்க 50இற்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் களத்தில் இறங்கினர்.

அதேவேளை, குறித்த பிரதேசங்களில் இடுப்பளவு சேற்றுநீர் தேங்கி நிற்கின்றது. கற்பாறைகள் பல மலையிலிருந்து உருண்டு வந்து வீதிகளுக்குக் குறுக்கே விழுந்து கிடக்கின்றன.

அதேவேளை, வீடு ஒன்றின் இடிபாடுகளுக்குள் பல மணி நேரமாகச் சிக்கியிருந்த 14 வயதான ஒரு சிறுமியை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டனர்.

மீட்பு பணிக்கு உதவுவதற்காகப் பல விமானங்களை அமெரிக்காவின் கடலோர காவல்படை அனுப்பியிருந்தது. (ஐ)

# ஹெண்டுராஸ் கடலில் பாரிய நிலநடுக்கம்



ஹொண்டுராஸ், ஜன. 11

மத்திய அமெரிக்க நாடான ஹெண்டுராஸின் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு (இலங்கை நேரப்படி நேற்றுக் காலை) சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஹெண்டுராஸ் - கேமேன் தீவுகளுக்கு இடையே உருவான இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.6 அலகாகப் பதிவாகியது. இதனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கம் ஹோண்டுராசின் பாரா பட்டுகா நகரில் இருந்து 202 கி.மீ. வடக்கு-வடகிழக்கில் கடலுக்கடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக வீடுகள் மற்றும் கட்டடங்கள் கடுமையாகக் குலுங்கின. ஒரு சில பகுதிகளில் உள்ள வீடுகளில் விரிசல் ஏற்பட்டது. பொதுமக்கள் வீடுகளை விட்டு அலறியடித்துக் கொண்டு வெளியேறினர். இதன் பாதிப்பு குறித்த விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

ஹெண்டுராஸ் முழுவதும் அவசரகால மீட்புக் குழுவினர் தயார் நிலையில் இருப்பதால் பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அந்நாட்டு ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

எனினும், போர்ட்டோ ரிகோ, கியூபா, ஜமைக்கா மற்றும் மத்திய அமெரிக்கக் கடற்பகுதியில் உள்ள தீவுகளில் சுனாமி ஆபத்து உள்ளதாக அமெரிக்காவின் தேசிய சுனாமி எச்சரிக்கை மையம் எச்சரித்தது.

எனினும், பின்னர் சில மணி நேரத்தில் சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. (ஐ)

# பூமியின் பின்புறம் போகும் சீனா



பெய்ஜிங், ஜன. 11

சீனாவின் தியாங்காங் என்ற விண்வெளி ஆய்வுகூடம் செயல் இழந்ததால் இது பூமியின் பின்புறம் விழும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட 13 நாடுகள் இணைந்து விண்வெளி ஆய்வுகூடம் கட்டி வருகின்றன. இதற்கு இணையாக சீனா மட்டும் தனியாக ஒரு விண்வெளி ஆய்வகம் உருவாக்கியது.

இதற்கு 'தியாங்காங்' எனப் பெயரிடப்பட்டது. தற்போது இந்த ஆய்வகம் செயலிழந்துவிட்டது. எனவே இது பூமியை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. பல்லாயிரம் தொன் எடை கொண்ட இந்த விண்வெளி ஆய்வகம் பூமியின் மீது மோதி கடும் சேதத்தை விளைவிக்கும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எனினும், இதை சீன விஞ்ஞானி மறுத்துள்ளார். சீன விண்வெளி தொழில் நுட்ப அக்கடமியின் மூத்த விஞ்ஞானியான ஷாங் பெங் கூறும்போது,

"செயல் இழந்த தியாங்காங் 1 விண்வெளி ஆய்வகம் பூமியிலிருந்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அது பூமியின் மீது மோதி பாதிப்பை ஏற்படுத்தாது.

பூமியின் பரப்பில் நுழைந்தவுடன் அது எரிந்து விடும். மீதம் இருக்கும் உடைந்த பாகங்கள் பூமியின் பின்புறமாக பசுபிக் கடலில் விழச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார். (ஐ)



# விளையாட்டு வீரர்கள் ஓரினச் சேர்க்கை திருமணம்

நியூசவுத்வேல்ஸ், ஜன. 11

ஓரினச் சேர்க்கையாளர்களான அவுஸ்திரேலிய தடகள வீரர்கள் இருவர் திருமணம் செய்துள்ளனர்.


அவுஸ்திரேலியாவில் ஓரினச் சேர்க்கையாளர் திருமணத்துக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தடகள வீரர்களான லூக் சுல்லிவர்ன் (23), கிரேய்க் பர்ன்ஸ் (29) ஆகியோர் ஓரினச் சேர்க்கைத் திருமணம் செய்து கொண்டனர். இவர்களது திருமணம் ஆஸ்திரேலிய நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நியூ சவுத் வேல்ஸ் நகரில் நடந்தது.

திருமணம் முடிந்ததும் இருவரும் ஒருவரையொருவர் முத்தமிட்டுக்கொண்டனர். அப்போது தங்களது வீட்டின் முன்பு பட்டாசு வெடித்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சட்ட அங்கீகரம் கிடைத்த பின்னர் அவுஸ்திரேலியாவில் நடந்த முதல் ஓரினச்சேர்க்கைத் திருமணம் என்ற பெருமையை இந்த ஜோடி பெற்றுள்ளது. (ஐ)

# தொடரும் போராட்டம்



சென்னை, ஜன. 11

ஊதிய உயர்வு, ஓய்வூதிய நிலுவைத் தொகை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசு போக்குவரத்து தொழிற்சங்கங்களின் போராட்டம் ஏழாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

கடந்த 4ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சில தொழிற்சங்களின் ஊழியர்களுடன், தற்காலிக சாரதிகள், நடத்துநர்கள் மூலம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அப்போதும் குறைந்த அளவிலான பேருந்துகளே செல்வதால் போக்குவரத்து முடங்கி உள்ளது. (ஐ)



# வைரலாகும் மலிங்க

கொழும்பு, ஜன. 11

இலங்கை வீரர் லசித் மலிங்க BMW கார் ஒன்றுடன் நிற்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்க, இலங்கை அணியில் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வரும் இவர், தற்போது விலையுயர்ந்த BMW கார் ஒன்றை வாங்கியுள்ளார்.

மேலும், அந்தக் காருடன் தான் நிற்கும் புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார். இந்தப் புகைப்படம் வைரலாகியுள்ளது. (ஐ)



# அசத்தல்

மெல்பேர்ண், ஜன. 11

அஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் கூயொங் கிளாசிக் டென்னிஸ் தொடரில் டோமினிக் தெயிமை வீழ்த்தினார் நோவாக் ஜோகோவிக்.

கூயொங் கிளாசிக் டென்னிஸ் தொடர் அஸ்ரேலியாவின் மெல்பேர்ண் நகரில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இதில், நேற்று நடைபெற்ற போட்டியில் 14ஆம் நிலை வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிக், ஐந்தாம் நிலை வீரரான டோமினிக் தெயிமை எதிர்கொண்டார்.

இப்போட்டியின், முதல் சுற்றில் ஜோகோவிக் அதிரடியாக விளையாடினார். இதனால், 6:1 என்ற புள்ளிக் கணக்கில் முதல் சுற்றை எளிதாக அவர் கைப்பற்றினார். தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது சுற்றையும் 6:4 என ஜோகோவிக் கைப்பற்றினார். இதன் மூலம் 2:0. என்ற சுற்றுக் கணக்கில் ஜோகோவிக் வெற்றி பெற்றார்.

கடந்த ஆறு மாதங்களாகக் காயம் காரணமாக ஜோகோவிக் எந்தவொரு போட்டியிலும் வெற்றி பெறாதமையால் தரவரிசையில் பின்தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக நடைபெற்ற மற்றொரு போட்டியில், தரவரிசையில் ஆறாவது இடத்தில் இருக்கும் மரின் சிலிக், அஸ்ரேலியாவின் மத்தீவ் எப்டனை எதிர்கொண்டார். இப்போட்டியில், 6:7, 6:4, 7:5 என்ற புள்ளிக் கணக்கில் மேத்தீவ் எப்டன் வெற்றி பெற்றார். (ஐ)

# யங்கம்பன்ஸ் முதல் வெற்றி



சமர்பாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின், லீக் சுற்றின் முதல் வெற்றியைப் பதிவு செய்தது கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது லீக் சுற்றுப் போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் 2:0 என்ற கோல் கணக்கில் கொற்றாவத்தை றேஞ்சஸ் விளையாட்டுக் கழத்தை வீழ்த்தியது கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம். (ஐ-66)

# அரையிறுதியில் டயமன்ஸ்



ஸ்ரீ அம்பாளின் உதைபந்தாட்டத் தொடரில் நியூட்டன் விளையாட்டுக் கழகத்துடனான போட்டியை சமனிலைப்படுத்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது டயமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் சுழற்சி முறையிலான உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்றுவருகின்றது.

இதில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் வெற்றிபெறும் அணி அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பிருந்ததால் இரு அணியினரினதும் ஆட்டத்தில் அனல் பறந்தது. இந்நிலையில் இரு அணியினரும் தலா 2 கோல்களைப் போட ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

எனினும், புள்ளிகளடிப்படையில் முன்னிலை வகித்த டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் அரையிறுதிக்கு முன்னேறும் வர்ய்ப்பைப் பெற்றது. (ஐ-66)

# வேட்டையாடு விளையாடு



தென்னாபிரிக்கா, ஜன. 11

ஐ.சி.சியால் வெளியிடப்பட்ட புதிய தரவரிசைப் பட்டியலில், இந்திய விக்கெட்டுகளை வேட்டையாடி விளையாடிய தென்னாபிரிக்க வேகப்பந்துவீச்சாளரான ரபடா முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

புதிய டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில், துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் அவுஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித் 947 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

நான்காவது இடத்தில் இருந்த இங்கிலாந்தின் ஜோ ரூட் 881 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். இரண்டாவது இடத்தில் இருந்த இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி 880 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கை வீரர் தினேஷ் சண்டிமால் 743 புள்ளிகளுடன் இரண்டு இடங்கள் முன்னேறி எட்டாவது இடத்துக்கு வந்துள்ளார்.

பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்தியத் தொடரின் முதல் ஆட்டத்தில் அபாரமாகச் செயற்பட்ட தென்னாபிரிக்காவின் ககிசோ ரபடா முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். முதல் இடத்தில் இருந்த இங்கிலாந்தின் அண்டர்சன் இரண்டாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

இந்திய வீரர்களான ஜடேஜாவும், அஸ்வினும் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தில் நீடிக்கின்றனர். இலங்கைப் பந்துவீச்சாளரான ரங்கன ஹேரத் ஆறாவது இடத்திலிருந்து ஏழாவது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். (ஐ)

# கோஹ்லிதான் குறி

"இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லியின் விக்கெட்தான் எங்களது இலக்காக இருந்தது" என்று தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளரான பிலாண்டர் கூறியுள்ளார்.

கேப்டவுணில் நடந்த முதல் டெஸ்டில் அவர் இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்குக் கடும் சவாலாகத் திகழ்ந்தார். அவரது பந்தை எதிர் கொள்ள முடியாமல் இந்திய வீரர்கள் திணறினார்கள். அவர் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி தென்னாபிரிக்க வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தார்.



"இந்த நிலையில் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி தான் எங்களது இலக்காக இருந்தார்" என்று பிலாண்டர் தெரிவித்து உள்ளார்.

"விராட் கோஹ்லி மிகவும் அருமையான அதிரடி வீரர். அவரை வீழ்த்துவதுதான் எங்களது இலக்காக இருந்தது. அவரைத் தொடக்கத்திலேயே ஆட்டமிழக்கச் செய்துவிட்டால் எங்களுக்கு வெற்றி எளிது என்று கணித்தோம்.

அதன்படியே இரண்டு இன்னிங்ஸ்களிலும் அவரை விரைவில் ஆட்டமிழக்கச் செய்தோம். விராட் கோஹ்லிக்கு தொடர்ந்து 'அவுட் - சுவிங்கர்' பந்துகளையே வீசினேன். அதில் ஒரு பந்தில் அவர் சிக்கி விட்டார்." என மேலும் தெரிவித்தார் பிலாண்டர். (ஐ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 11.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.